# திரையரங்குகளில் புதிய படங்களுக்கு முதல் வாரம் தினமும் ஐந்து காட்சிகள்

## முதல்வர் விஜய் உத்தரவு

**சென்னை, மே 25:** தமிழகத்தில் புதிய தமிழ்த் திரைப்படங்கள் வெளியிடப்படும் நாளிலிருந்து ஏழு நாள்களுக்கு தினமும் ஐந்து காட்சிகள் திரையிட அனுமதி அளித்து முதல்வர் ஜோசப் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கடந்த மே 16-ஆம் தேதி திரைப்படத் துறையினர் முதல்வரை சந்தித்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். அவற்றில் முக்கியமாக, தமிழ்நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளில் அனைத்து திரைப்படங்களையும் நாளொன்றுக்கு ஐந்து காட்சிகள் திரையிட அனுமதியளிக்கும்படி கோரியிருந்தனர்.

1957-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதியின் கீழ் தினசரி நான்கு காட்சிகள் திரையிடப்பட்டு வருகிறது. மேலும், உள்ளூர் பண்டிகை நாள்கள் அல்லது பொது விடுமுறை நாள்களில், ஒரு சிறப்புக் காட்சிக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த நிலையில், திரைப்படத் துறையினர் அளித்த கோரிக்கை குறித்து கலந்தாலோசித்த பின்னர், விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து திரையரங்குகளிலும் புதிதாக தமிழ்த் திரைப்படங்கள் வெளியிடப்படும் நாளிலிருந்து ஏழு நாள்களுக்கு தினமும் ஐந்து காட்சிகள் திரையிடவும், உள்ளூர் பண்டிகை நாள்கள், பொது விடுமுறை நாள்கள், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஐந்து காட்சிகள் திரையிடவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக அரசு மற்றும் உரிமம் வழங்கும் அலுவலரின் அனுமதி தனியாக பெறத் தேவையில்லை என முதல்வர் உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னைப் பல்கலை. தொலைநிலைக் கல்வியில் நிலுவைப் பாடத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கலாம்

**சென்னை, மே 25:** சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி நிறுவனத்தின் தற்போதைய கல்விப் பருவத்தைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் நிலுவைப் பாடங்கள் வைத்திருக்கும் மாணவர்கள் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

இது குறித்த செய்திக்குறிப்பு:

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி நிறுவனத்தில் இளநிலை, முதுநிலை, டிப்ளமோ படிப்பு, சான்றிதழ் படிப்பு போன்றவைகளுக்கு டிசம்பர் 2025 மற்றும் 2026 ஜூன் மாதம் பருவத் தேர்வுகளுக்கு விண்ணப்பங்கள் மாணவர்களிடம் கோரப்பட்டுள்ளன.

மேலும், இதே தொலைநிலைக் கல்வி நிறுவனத்தில் படிப்பு தேர்வுகளில் தேர்ச்சி பெறாது நிலுவையில் வைத்திருக்கும் பாடங்களுக்கும் விண்ணப்பிக்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இந்த இரு தரப்பு மாணவர்களும் தேர்வில் பங்கேற்க விண்ணப்பங்கள் பல்கலையின் இணையதளத்தில் (www.ideunom.ac.in) வெளியிடப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பங்களை மே 25 முதல் ஜூன் 3 - ஆம் தேதி வரை அபராதமின்றி நிறைவு செய்து இணையம் மூலமாக விண்ணப்பிக்கலாம்.

ஜூன் 4 -ஆம் தேதி முதல் 8-ஆம் தேதி வரை அபராதத் தொகை செலுத்தி மேற்கண்ட இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதல்வர் விஜய்யுடன் செளமியா சுவாமிநாதன், குஷ்பு சந்திப்பு

**சென்னை, மே 25:** முதல்வர் சி.ஜோசப் விஜய்யுடன் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் செளமியா சுவாமிநாதன், பாஜக நிர்வாகியும், நடிகையுமான குஷ்பு ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

கடந்த மே 10-ஆம் தேதி முதல்வராக விஜய் பதவியேற்றது முதல் அவரை தொழிலதிபர்கள், வெளிநாட்டு, உள்நாட்டு பெரு நிறுவனங்களின் உரிமையாளர்கள், தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், மாணவர் சங்கத்தினர், திரை பிரபலங்கள், திரைப்பட சங்கத்தினர் ஆகியோர் சந்தித்து தங்களது துறைகள் தொடர்பாக ஆலோசித்து வருகின்றனர்.

இந்த நிலையில், முதல்வரை உலக சுகாதார நிபுணரும், விஞ்ஞானியுமான செளமியா சுவாமிநாதன் சந்தித்துப் பேசினார். இது மரியாதை நிமித்தமான சந்திப்பு என்று அவர் கூறினார்.



சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜோசப் விஜய்யை சந்தித்து பேசிய டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் செளமியா சுவாமிநாதன் மற்றும் நிர்வாகிகள்.

தொடர்ந்து அவர் வேளாண் துறை அமைச்சர் ர. வினோத்தையும் சந்தித்தார்.

அவரைத் தொடர்ந்து, தமிழ்நாடு ஹோட்டல்கள் சங்கத் தலைவர் வெங்கட சுப்பு, சென்னை ஹோட்டல்கள் சங்கத்தின் தலைவர் ரவி உள்ளிட்ட நிர்வாகிகள் சந்தித்தனர். தொடர்ந்து சின்னத்திரை தயாரிப்பாளர்கள் சார்பில் நடிகை குஷ்பு, முதல்வர் விஜய், திரைத் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ராஜ் மோகன் ஆகியோரை சந்தித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய குஷ்பு, முதல்வராக விஜய்யை பார்த்தது உணர்வுபூர்வமாக இருந்தது. தமிழகத்துக்கு மிகப்பெரிய மாற்றத்தை விஜய் செய்வார். அதற்கான கால அவகாசத்தை அவருக்கு அளிக்க வேண்டும் என்றார்.

# மணலி அருகே கழிவு எண்ணெய்க் கிடங்கில் தீ

**திருவொற்றியூர், மே 25:** மணலி அருகே கழிவு எண்ணெய் சேமிப்பு கிடங்கில் திங்கள்கிழமை பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

மணலியை அடுத்த விச்சூர் கிராமத்தில் அருள் முருகன் நகர் பகுதியில் ராஜேஷ் என்பவருக்குச் சொந்தமான தனியார் எண்ணெய் கிடங்கு உள்ளது.

இங்கு பெட்ரோலிய கழிவு எண்ணெய் தொட்டிகள், பேரல்களில் சேமித்து வைத்து அதிலிருந்து பெட்ரோலிய பொருள்களை தயாரிக்கும் பணி நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

இங்கு சுமார் 1 லட்சம் லிட்டர் வரை எண்ணெய் சேமித்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

திங்கள்கிழமை இங்குள்ள சேமிப்புக் கிடங்கின் ஒரு பகுதியில் தீ பற்றியது. இதையடுத்து, இங்கு வேலை செய்த ஊழியர்கள் வெளியேற்றப்பட்டனர்.


மணலி அருகே விச்சூர் கிராமத்தில் தனியார் பெட்ரோலிய கழிவு எண்ணெய் கிடங்கில் பற்றிய தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்ட தீயணைப்பு வீரர்கள்.

தகவல் அறிந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்கு வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

எண்ணெய் கிடங்கில் பற்றிய தீயில் அங்கு இருப்பு வைக்கப்பட்டிருந்த பேரல்கள் வெடித்து சிதறியதால், தீ நாலாபுறமும் பரவியது. தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இதையடுத்து, சிபிசிஎல் நிறுவனத்திலிருந்து ரசாயன நுரை மூலம் தீயை அணைக்கும் சிறப்பு வாகனம் வரவழைக்கப்பட்டு தீயை அணைக்கும் பணி நடைபெற்றது.

மணலி, எண்ணூர், மாதவரம், தண்டையார்பேட்டை, செங்குன்றம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து பத்துக்கும் மேற்பட்ட தீயணைப்பு நிலையங்களைச் சேர்ந்த வாகனங்களின் உதவியுடன் நூற்றுக்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் சுமார் 10 மணி நேரம் போராடி, படிப்படியாக தீயை அணைத்தனர்.

இதில் தீயணைப்பு வீரர்கள் சிலருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. உடனடியாக ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட வீரர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தீ விபத்தால் வானுயரத்துக்கு எழுந்த கரும்புகையால் அருகில் இருந்த கிராம மக்கள் பீதியடைந்தனர். மேலும், நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு கண் எரிச்சல், மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டது.

இச்சம்பவம் குறித்து மணலி புதுநகர் காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.


**MANAPPURAM FINANCE LTD.**

CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House,
P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

**தங்க நகைகள் பொது ஏலம்**

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கீழ்க்கண்ட கிளைகளில் 16.06.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

சென்னை, ஆலந்தூர் எம் கே என் ரோடு, 0116620700019353, 0117, அம்பத்தூர், 0117550700034919, 5065, 0117550730011849, அமிஞ்சிக்கரை, 0120540730013763, அண்ணாநகர் சென்னை, 0100220700618195, 8208, 0100220730019280, 9425, 0120, அண்ணாநகர் கிழக்கு, 0107420700034814, 0107420730014220, 5925, அசோக்நகர், 0124730730012301, 3227, 3534, ஐயனாவரம், 0101120700767584, 8253, 8271, 8369, பி பி ரோடு ஜங்ஷன், வியாசர்பாடி, 0116210700033126, 0116210730016638, பிர்க்லின் ரோடு புரசைவாக்கம் , 0131250730014467, பிராட்வே, 0119720700035144, 0070, சிந்தாதிரிப்பேட்டை, 0122200700018965, 9000, 9050, குரோம்பேட்டை, 0121220700025850, 0121220730014726, 7528, 7809, எழும்பூர், 0109490700042611, 2617, 2742, 0109490730022049, எண்ணூர் சென்னை, 0109340700078344, 1636, 0109340730031458, 1945, எருக்கஞ்சேரி, 0123690700023257, 3271, 3611, 0123690730011712, ஜெமினி மவுண்ட் ரோடு, 0117030700017518, 7542, 8089, 8332, கோவிந்தன் ரோடு சென்னை, 0111650700027923, ஜி பி ஓ ஜங்ஷன் மவுண்ட் ரோடு, 0121980730008234, ஐ சி எஃப் காலனி அத்திப்பேட்டை, 0118140700044213, 5332, 6382, 0118140730017965, 7966, கண்ணதாசன் நகர் சென்னை, 0107740730024522, கஸ்தூர்பா நகர் அடையாறு, 0101470700742790, 4704, 4717, 4737, 0101470730023839, 4036, 4037, 4038, 4039, [illegible] ரெட் ஹில்ஸ் சென்னை, 0122130730017942, 7943, 7944, 7945, 7997, 8008, 8013, 8014, திருவொற்றியூர், 0107380700051812, 1954, 2087, 2383, 2524, 2585, 2783, 0107380730007242, 8118, 8168, திருவள்ளூர், 0109900700042241, 2845, 0109900730006365, விழுப்புரம், கிஞ்சி, 0123000700045700, 0123000730018819, 8820, நேரு தெரு திண்டிவனம், 0104170700777195, 0110, நேருஜி ரோடு விழுப்புரம், 0102460700772825, 0102460730038672, திருவண்ணாமலை ரோடு கிஞ்சி, 0104260700074168, 5375, திண்டிவனம், 0120830700042967, 3118, 3902, 0120830730012015, 2927, 2928, விழுப்புரம், 0121310700039880, ஜம்ணுல், சிறுநூணுல், 0104650730009160, 0375, புதுச்சேரி, அண்ணாசாலை புதுச்சேரி, 0118330700020031, அரியங்குப்பம், 0125080730009309, 9558, மரப்பாலம், 0119130700034543, 4900, 4978, 4989, 5069, 5138, எம்.ஜி ரோடு புதுச்சேரி, 0110800730014572, நேரு தெரு புதுச்சேரி, 0120470700019215, 0202, 0212, 0338, நெல்லித்தோப்பு புதுச்சேரி, 0103250700779166, 9220, 9372,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக


# 4 ரயில் நிலையங்களில் அவசர சிகிச்சை மையம்

**சென்னை, மே 25:** சென்னை ரயில்வே கோட்டத்தில் எழும்பூர் உள்ளிட்ட 4 முக்கிய ரயில் நிலையங்களில் அவசர சிகிச்சை மைங்கள் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை ரயில்வே கோட்டம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: சென்னை ரயில்வே கோட்டத்தில் எழும்பூர், தாம்பரம், காட்பாடி மற்றும் செங்கல்பட்டு ஆகிய ரயில் நிலையங்களில் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய மருந்தகங்களுடன் கூடிய அவசர மருத்துவ அறைகள் அமைக்கப்படவுள்ளன. அந்த அறைகளை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் தகுதியான தனியார் நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளன.

பயணிகள் மற்றும் ரயில் நிலையத்தைப் பயன்படுத்துவோருக்கு தேவையான அவசர மருத்துவ உதவிகளை உடனுக்குடன் வழங்கும் வகையில் அவசர சிகிச்சை அறைகள் அமைக்கப்படவுள்ளன. அவற்றில் பயிற்சி பெற்ற மருத்துவப் பணியாளர்கள், முதலுதவி வசதிகள் அவசர சிகிச்சை ஆதரவு, அத்தியாவசிய மருந்துகள், ஆம்புலன்ஸ் வாகன சேவை மற்றும் உயிர் காக்கும் மருத்துவ சாதனங்கள் ஆகியவை 24 மணி நேரமும் தடையின்றிக் கிடைக்க வழிவகை செய்யப்படவுள்ளது.

திட்டத்துக்கு தகுதியான மருத்துவமனைகள், சுகாதார சேவை நிறுவனங்கள், தேவையான அனுபவமும் சட்டபூர்வமான உரிமங்களும் பெற்ற மருத்துவ முகமைகள் ஆகியவை திறந்த நிலை மின் ஒப்பந்தப்புள்ளியில் வரும் ஜூன் மாதத்துக்குள் விண்ணப்பித்து பங்கேற்கலாம்.

பயணிகளின் பாதுகாப்பு, உடனடி மருத்துவ வசதிகள் மற்றும் மேம்பட்ட பொதுமக்கள் சேவை ஆகியவற்றின் அடிப்படையில் சிகிச்சை அறைகள் ஏற்படுத்தப்படவுள்ளன. அத்துடன் சிகிச்சைக்கானவர்கள் தாங்கள் விரும்பும் மருத்துவமனைக்கு செல்லவும் வசதி ஏற்படுத்தப்படும்.

ஆகவே, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மருத்துவ சேவைகளுடன் தங்களது நிறுவன அடையாளத்தை புகழ் பெற்ற அதிக மக்கள் வந்துசெல்லும் ரயில் நிலையங்களில் நிறுவும் வாய்ப்பும் ஏற்படுத்தப்படுகிறது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.


**கடன் வசூல் தீர்ப்பாயம்-II**
**சென்னை வழக்குமன்றத்தில்**
(6வது தளம், கூடுதல் அலுவலகக் கட்டம், சாஸ்திரிபவன், ஹாடோஸ் சாலை, சென்னை-600006)

O.A.எண். 63/2026

M/s. டச்சு பேங்க் AG, தற்சமயம் செயல்படும் இடம்: 4-4A, வெஸ்டர்ன் டவர், சன்னி சைடு, அப்பல்லோ மருத்துவமனை அருகில், தரைத்தளம், ஷஃபி முகமது சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006 ...மனுதாரர்

-எதிரிடை-

M/s. MDD என்டர்பிரைசஸ் பிரதிநிதியாக இதன் உரிமையாளர் தீனதயாளன் (PAN எண். CJOPD8917Q) எண். 57, A பிளாக், ஸ்ரீராமன் 1ஆவது தெரு, தணிகாச்சலம் நகர், பொன்னியம்மன்மேடு, சென்னை-600110 .. 1வது எதிர்மனுதாரர்

கடன் ஒப்பந்தப்படி, வணிக தவணை கடன் கணக்கு எண். 250041265510019 க்கான 10.09.2025 அன்றுள்ளபடியான ரூ.20,54,673.18.யை (ரூபாய் இருபது லட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து அறுநூற்று எழுபத்து மூன்று மற்றும் பதினெட்டு பைசா மட்டும்) நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக மாண்பமை கடன் வசூல் தீர்ப்பாயம் II, சென்னை முன்னிலையில் மனுதாரர் வங்கியானது முதலேற்பு மனு எண் 63/2026 தாக்கல் செய்திருந்தது.

மேற்சொன்ன வழக்கானது, மாண்பமை பதிவாளர் கடன் மீட்புத் தீர்ப்பாயம்-II, சென்னை முன்னிலையில் 15.04.2026 அன்று விசாரணைக்கு வந்தது. மனு மீது விசாரணை நடத்திய மாண்பமை பதிவாளர் கடன் மீட்புத் தீர்ப்பாயம்-II, சென்னை, மேற்படி வழக்கில் உங்களுக்கு (1வது எதிர்மனுதாரர்) எதிராக பத்திரிகையில் அறிவிப்பு வழங்க மனுதாரர் வங்கிக்கு உத்தரவிட்டார்.

மேற்சொன்ன 63/2026 எண் கொண்ட முதலேற்பு மனுவானது, 09.06.2026 அன்று விசாரணைக்கு பட்டியலிடப்பட்டுள்ளது என்பதை தயவுகூர்ந்து கவனத்தில் கொள்ளவும். எனவே, விசாரணை நாளின்போது அஃதாவது 09.06.2026 அன்று முற்பகல் 11.00 மணிக்கு நீங்கள் (1வது எதிர்மனுதாரர்) நேரில் அல்லது உங்களது வழக்கறிஞர் மூலமாக ஆஜராக வேண்டியது. ஆஜராகத் தவறினால், நீங்கள் இல்லாத நிலையிலும் மேற்சொன்ன வழக்கு விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்படும்.

நாள்: 23.05.2026
இடம்: சென்னை

M/s. சாய் கிருஷ்ணன் அசோசியேட்ஸ்
மனுதாரர் வங்கியின் வழக்கறிஞர்கள்

**வரி விளம்பரம்**

**PUBLIC NOTICE**

**CHANGE OF NAME**

**CHANGE OF NAME**

I, **Chitra N**, daughter of Thiru Narayana Swamy P S, born on 6th January 1970 (District of Birth: Vellore), residing at D. No. 11, P. No. 42(2), LH Nagar, 3rd Main Road, Adambakkam, Chennai-600 088, shall henceforth be known as **CHITRA RAVISHANKAR**.
Chennai, 11th May 2026
CHITRA N


# முதுநிலை மருத்துவ மாணவர் சேர்க்கை: என்எம்சி அறிவுறுத்தல்

**சென்னை, மே 25:** கடந்த ஆண்டில் கலந்தாய்வு மூலம் மருத்துவக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள முதுநிலை மருத்துவ மாணவர்கள் குறித்த விவரங்களை இணைய வழியில் பதிவேற்றுமாறு தேசிய மருத்துவ ஆணையம் (என்எம்சி) அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக என்எம்சி செயலர் ராகவ் லங்கர் வெளியிட்டுள்ள அறிவிப்பு:

முதுநிலை மருத்துவப் படிப்புகளில் உள்ள இடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட கலந்தாய்வில் மாணவர்களுக்கு கல்லூரிகளில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் விவரங்கள், படிப்பின் விவரம், இடஒதுக்கீடு விவரம் உள்ளிட்டவற்றை என்எம்சி இணையப் பக்கத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கான தெரிவுப் பகுதியில் பதிவேற்றுவதற்கான வாய்ப்பு ஜூன் 8 வரை வழங்கப்பட்டுள்ளது.

அதைக் கருத்தில் கொண்டு அந்த விவரங்களை பதிவேற்றுமாறு மருத்துவக் கல்லூரிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில்

# இளநிலைப் பட்டப் படிப்புகளுக்கான தரவரிசை ஜூன் 3-இல் வெளியீடு; ஜூன் 8 முதல் கலந்தாய்வு

**சென்னை, மே 25:** நிகழாண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளநிலைப் பாடப் பிரிவுகளுக்கான மாணவர்கள் சேர்க்கையில் பொதுப் பிரிவினருக்கான தரவரிசைப் பட்டியல் வரும் ஜூன் 3- ஆம் தேதி கல்லூரிகளுக்கு அனுப்பப்படும் என்றும், கலந்தாய்வு ஜூன் 8 முதல் தொடங்கப்படும் என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநரக ஆணையர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கல்லூரிக் கல்வி இயக்குநரக ஆணையர் எ.சுந்தரவல்லி அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

2026-27 ஆம் கல்வியாண்டுக்கான அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளநிலைப் பாடப் பிரிவுகளுக்கான மாணவர்கள் சேர்க்கை விண்ணப்பப் பதிவு மே 7- ஆம் தேதி முதல் நடைபெற்று வருகிறது.

விண்ணப்பப் பதிவு இறுதி நாள் மே 29- ஆம் தேதியாகும்.

சேர்க்கைக்கான கலந்தாய்வுக்கு பொதுப் பிரிவினருக்கான தரவரிசைப் பட்டியல் வரும் ஜூன் 3- ஆம் தேதி அனைத்துக் கல்லூரிகளுக்கும் அனுப்பப்படும்.

இவர்களுக்கான பொதுக் கலந்தாய்வு ஜூன் 8-ஆம் தேதி தொடங்கப்பட்டு, ஜூன் 18-ஆம் தேதி முடிவுற்று சேர்க்கைகள் நடைபெறும்.

மாற்றுத் திறனாளிகள், விளையாட்டு வீரர்கள், முன்னாள் ராணுவத்தினர், படை வீரர்கள், தேசிய மாணவர் படை வீரர்கள், அந்தமான் நிகோபார் தமிழ் மாணவர்கள் போன்றோருக்கான சிறப்பு ஒதுக்கீடு மாணவர்களுக்கான தரவரிசைப் பட்டியல் ஜூன் 2-ஆம் தேதி அனைத்துக் கல்லூரிகளுக்கும் அனுப்பப்படும். இவர்களுக்கான கலந்தாய்வு ஜூன் 5-6 ஆகிய தேதிகளில் நடைபெறும்.

இந்த சேர்க்கைகளுக்கு பின்னர் முதலாமாண்டு இளநிலை பட்டப் படிப்பு மாணவர்களுக்கான வகுப்புகள் ஜூலை 1-ஆம் தேதி தொடங்கும் என கல்லூரி கல்வி இயக்குநரக ஆணையர் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.